# யூலை – 11 – புதன்

**புனித பெனடிக்ட் (ஆசீர்வாதப்பர்)**

**“அவர் செய்த வியத்தகு செயல்களை நினைவு கூருங்கள்.“-திபா 105:5**

## முதல் வாசகம் : ஓசே10 : 1 – 3, 7 – 8, 12

ஆண்டவர் கூறுவதுஇஸ்ரயேல் தழைத்து வளர்ந்த திராட்சைக்கொடி, அது மிகுதியான கனிகளைத் தனக்கே தாங்கி நிற்கின்றது் எவ்வளவு மிகுதியாகக் கனிகளைக் கொடுத்ததோ, அவ்வளவு மிகுதியாய்ப் பலிபீடங்களை அமைத்தது் எத்தகைய சிறப்புடன் நாடு செழிப்புற்றதோ, அதற்கு இணையாய்ச் சிலைத் தூண்கள் சிறப்புப் பெற்றன. இருமனம் கொண்ட மக்களாகிய அவர்கள், தங்கள் குற்றத்திற்காகத் தண்டனை பெறுவார்கள் ஆண்டவர் அவர்களுடைய பலிபீடங்களைத் தகர்த்திடுவார் அவர்களுடைய சிலைத் தூண்களை நொறுக்கிடுவார்.அப்போது அவர்கள், ”நமக்கு அரசன் இல்லை ஆண்டவருக்கு நாம் அஞ்சி நடக்கவில்லை அரசன் இருந்தாலும், நமக்கு என்ன செய்வான்?” என்பார்கள்.சமாரியாவின் அரசன் நீர்மேல் குமிழிபோல் அழிந்துபோவான். இஸ்ரயேலின் பாவமாகிய சிலை வழிபாட்டின் உயர்ந்த இடமெல்லாம் அழிக்கப்படும் முள்களும், முட்புதர்களும் அவற்றின் பலிபீடங்கள்மேல் வளரும் அப்போது அவர்கள் மலைகளைப் பார்த்து, ”எங்களை மூடிக்கொள்ளுங்கள்” குன்றுகளைப் பார்த்து, “எங்கள்மேல் விழுங்கள்“ என்று சொல்வார்கள்.நீதியை நீங்கள் விதைத்துக் கொள்ளுங்கள் அன்பின் கனியை அறுவடை செய்யுங்கள் உங்கள் தரிசு நிலத்தை உழுது பண்படுத்துங்கள் ஏனெனில் ஆண்டவர் வந்து உங்கள்மேல் நேர்மையைப் பொழியுமாறு நீங்கள் அவரைத் தேடும் காலம் நெருங்கிவந்துவிட்டது.

**பதில்பாடல்:** ஆண்டவரது திருமுகத்தை இடையறாது நாடுங்கள்.

## நற்செய்தி : மத்தேயு 10 : 1 - 7

அக்காலத்தில் இயேசு தம் சீடர் பன்னிருவரையும் தம்மிடம் வரவழைத்தார். தீய ஆவிகளை ஓட்டவும், நோய் நொடிகளைக் குணமாக்கவும் அவர்களுக்கு அதிகாரம் அளித்தார்.அத்திருத்தூதர் பன்னிருவரின் பெயர் பின்வருமாறு. முதலாவது பேதுரு என்னும் சீமோன், அடுத்து அவருடைய சகோதரர் அந்திரேயா, செபதேயுவின் மகன் யாக்கோப்பு, அவருடைய சகோதரர் யோவான்,பிலிப்பு, பர்த்தலமேயு, தோமா, வரி தண்டினவராகிய மத்தேயு, அல்பேயுவின் மகன் யாக்கோப்பு, ததேயு,தீவிரவாதியாய் இருந்த சீமோன், இயேசுவைக் காட்டிக் கொடுத்த யூதாசு இஸ்காரியோத்து.இயேசு இந்தப் பன்னிருவரையும் அனுப்பியபோது அவர்களுக்கு அறிவுரையாகக் கூறியது ”பிற இனத்தாரின் எப்பகுதிக்கும் செல்லவேண்டாம். சமாரியாவின் நகர் எதிலும் நுழையவேண்டாம்.மாறாக, வழி தவறிப்போன ஆடுகளான இஸ்ரயேல் மக்களிடமே செல்லுங்கள்.அப்படிச் செல்லும்போது ”விண்ணரசு நெருங்கி வந்துவிட்டது” எனப் பறைசாற்றுங்கள் என்றார்.

**தியானம்:** இறையழைத்தல் எனப்படுவது மாபெரும் கொடையாகக் கருதப்படவேண்டியது. எம்மையும் தமது சீடர்களாக வாழ ஆண்டவர் இயேசு அழைக்கின்றார். இன்றைய நற்செய்தியில் “வழிதவறினப்போன ஆடுகளான இஸ்ரயேல் மக்களிடமே செல்லுங்கள்.....விண்ணரசு நெருங்கி வந்துவிட்டது எனப் பறைசாற்றுங்கள்“ (மத்தேயு 10:6-7) என்று தமது அதிகாரங்களைப் பகிர்ந்தளித்து திருத்தூதர்களை வழியனுப்பும் இயேசுவைச் சந்திக்கின்றோம். தீய ஆவிகளை ஓட்டவும் நோய் நொடிகளைக் குணமாக்கவும் “என்னையும் விட வல்லசெயல்கள் செய்வார்கள்“ என இயேசு அனுப்பி வைத்தாலும், அப்பனிருவரும் யார் என்று வேறு விதமாகச் சிந்திக்கவும் இன்றைய நற்செய்தி எம்மை அழைக்கின்றது. திருச்சீடர்களில் பெரும்பாலானவர்கள் மீன்பிடியாளர்கள். படிப்பறிவு அதிகம் இல்லாதவர்கள். அந்திரேயா வயது முதிர்ந்தவர். யோவான் வயதில் இளையவர். யாக்கோபு ஒரு சாதாரண தொழிலாளி. அநியாய வரியறவிடுபவர் எனக்குறைகேட்டவர் மத்தேயு. இளகிய மனம் கொண்டவர் ததேயு. யூதாசு பணத்தாசை பிடித்து ஆண்டவரையே காட்டிக்கொடுத்தவர். சக்திமிக்க சிந்தனையாளர் பிலிப்பு. பேதுரு ஆண்டவரையே மறுதலித்தவர். சீமோன் எனப்படுபவர் தீவிரவாதி. தோமா ஆண்டவரையே நம்ப மறுத்தாக நற்செய்தியில் வாசிக்கின்றோம். சமுதாய மதிப்பற்றவர்கள் இயேசு என்ற பெயர்கொண்டவரிடம் வைத்திருந்த ஆழமான நம்பிக்கையே “நீங்கள் என்னைத்தேர்ந்து கொள்ளவில்லை நான்தான் உங்களைத் தேர்ந்துகொண்டேன்“ (யோவான் 15:16) எனமாற்றமடைந்து திருச்சீடர்களாகும் பெறுபேற்றையும், வரவிருக்கும் விண்ணரசை அறிவிக்கும் பணிக்காக மாற்றியமைத்தது. அந்த அழைப்பின் குரலைக்கேட்க முடியாதவர்களாக நாம் வாழக்கூடும். தமது பணிகளை திருச்சீடர்களோடு ஆண்டவர் இயேசு பகிர்ந்தளித்தது போன்று நாமும் இறைவனாலே எமக்கு வழங்கப்பட்ட பணிகளை காழ்ப்புணர்ச்சி எதுவுமின்றி நம்பிக்கையுடனும், துணிவுடனும் அடுத்தவரோடு பகிர்ந்து சமூக வளர்ச்சிக்காக ஒற்றுமையாகப் பாடுபட்டு வரவிருக்கும் விண்ணரசை அறிவிக்கும் கருவிகளாக மாற்றமடைவோம்.